# முழு ஆண்டு பொதுத்தேர்வு

எட்டாம் வகுப்பு **தமிழ்**

**நேரம் ; 2.30 மணி** **மதிப்பெண் : 100**

**மாணாக்கர் பெயர் :** **பதிவு எண் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

==========================================

**I – சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 10 X 1 = 10**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியை குறிக்கும் சொல் ------------
   1. வைப்பு 2. கடல் 3. பறவை 4.ஆழி

2. பறவைகள்-------------------- பறந்து செல்கின்றன.
   1. நிலத்தில் 2. விசும்பில் 3) மரத்தில் 4) நீரில்

3 உடல் நலம் என்பது---------------------இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   1. அணி 2. பணி 3.பிணி 4, மணி

4 முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல்---------------------
   1. முற்று 2. எச்சம் 3.முற்றெச்சம் 4. வினையெச்சம்

5. காட்டிலிருந்து வந்த------------------கரும்பைத் தின்றன.
   1.முகில்கள் 2.முழவுகள் 3.வேழங்கள் 4.வேய்கள்

6. சிங்கம் ----------------------யில் வாழும்
   1. மாயை 2. ஊழி 3.முழை 4.அலை

7. இந்திய அரசு சிறந்த நடிகருக்கான-------------எனும் பட்டத்தை எம்.ஜி.ஆருக்கு வழங்கியது
   1. புரட்சித் தலைவர் 2.பாரத் 3.புரட்சி நடிகர் 4. பாரத மாமணி.

8 ஒன்றே ---------------என்று கருதி வாழ்வதே மனிதப் பண்பாகும்
   1. குலம் 2.குளம் 3.குணம் 4. குடம்

9 மக்கள் ஒழுக்கத்துடன் தொடர்புடையது------------------------
   1. வானம் 2.கடல் 3.மழை 4.கதிரவன்

10 அடுத்தவர் வாழ்வைக் கண்டு----------------கொள்ளக்கூடாது
   1. உவகை 2.நிறை 3.அழுக்காறு 4.இன்பம்

**II – கோடிட்ட இடத்தை நிரப்புக 5 X 1 = 5**

11. கலப்பில்-----------------------உண்டென்பது இயற்கை நுட்பம்

12 ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம்------------------

13. மனிதர்கள் தம்------------------தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்

14. அயோத்தி தாசர் நடத்திய இதழ்------------------------------

15 “ பா ” -------------------வகைப்படும்.

**III – பொருத்துக** **3 X 1 = 3**

| | | |
|---|---|---|
| 16. | வெண்பா | துள்ளல் ஓசை |
| 17 | ஆசிரியப்பா | செப்பலோசை |
| 18 | கலிப்பா | அகவலோசை |

**IV – எவையேனும் நான்கு ( 4 ) வினாக்களுக்கு விடையளி** **4 X 2 = 8**

19 யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது ?

20 எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக ?

21. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை ?

22. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார் ?

23. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது எது?

24. எது பெருமையைத் தரும் ?

**V – எவையேனும் நான்கு ( 4 ) வினாக்களுக்கு விடையளி** **4 X 2 = 8**

25. எழுத்துக்களின் பிறப்பு என்றால் என்ன ?

26. இருவகை அசைகளையும் விளக்குக ?

27. மெய் எழுத்துக்கள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன ?

28 வினை முற்று என்றால் என்ன ?

29. இரவுபகல் என்பது எவ்வகைத் தொடர் என விளக்குக ?

30 வேற்றுமை அணி என்றால் என்ன ?

**VI – அடிபிறழாமல் எழுதுக** **4 + 2 = 6**

31. **ஒன்றே குலமும்**-----ல் தொடங்கி.... உய்ம்மினே வரையுள்ள " ஒன்றே குலம் " பாடலை எழுதுக ?

32. **கான முயல்.....**என்ற திருக்குறளை எழுதுக ?

**VII - எவையேனும் நான்கு ( 4 ) வினாக்களுக்கு விடையளி - 4 X 4 = 16**

33 தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக?

34. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள் ?

35 அம்பேத்கரின் முதல் வெற்றி குறித்து எழுதுக ?

36. இவ்வுலகம் யாரால் இயங்குவதாக திருக்குறள் கூறுகிறது

37 தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர். ஆற்றிய பணிகள் யாவை ?

38 சிறந்த அரசியல் தலைவருக்கு இருக்க வேண்டிய பண்புகளாக நீங்கள் கருதுவன யாவை ?

www.Padasalai.Net

**VIII - விரிவான விடையளி** **2 X 6 = 12**

39 கொங்கு நாட்டு உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக
**(அ)** பூனா ஒப்பந்தம் குறித்து எழுதுக ?

40. குணங்குடியார் பராபரத்திடம் வேண்டுவன யாவை ( **அ )** தமிழ்வழிக் கல்வி பற்றி திரு.வி.க. கூறுவன யாவை ?

**IX – விரிவான விடையளி** **3 X 8 = 24**

41. " வெட்டுக் கிளியும் சருகு மானும் : கதையைச் சுருக்கி எழுதுக ?
( **அ )** குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைச் சுருக்கி எழுதுக ?

42 நான் விரும்பும் கவிஞர் ( **அ )** நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.

43 இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்ச்சியருக்கு விண்ணப்பம் எழுது
( **அ )** விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனை பாராட்டி கடிதம் எழுதுக ?

**X – அனைத்து வினாக்களுக்கும் விடையளி :** **8 X 1 = 8**

44. சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடுக்க
( அ ) சோறு----------------( உண், திண்) ( ஆ) சேவல்-------கூவும் / கொக்கரிக்கும்

45. இதழ்களை குவிப்பதால் பிறக்கும் எழுத்துக்கள் (உ, ஊ – அ, ஆ)

46. கலைச் சொல் எழுதுக : 1 - TEACHER 2 – MEDICAL SHOP

47. மரபுத் தொடரில் அமைக்க : முதலைக் கண்ணீர்

48. பிழைகளை திருத்தி எழுதுக : மவுன்ட் இரா பள்ளீ

49. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக : மழை நன்கு பெய்தது – எங்களால் விளையாட முடியவில்லை.

50. சிறுமி----------- ( தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்.

51. வினைமுற்றுகளை கோடிடுக : (1)மலர் விழி எழுதினாள்,(2) மாடு மேயும்.

தயாரித்தவர் : மு.ஜமால் முகமது, தலைமையாசிரியர், மவுண்ட் ஹிரா மெட்ரிக் பள்ளி - நெல்லிக்குப்பம்

www.Padasalai.Net